# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2022 சனவரி

## (103) பொருளியல்

அதிகளவான பரீட்சார்த்திகளால் பொருளியல் வினாத்தாளுக்கு அளிக்கப்பட்ட விடைகளை அவதானித்தபோது அவை எண்ணிக்கை ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சில வினாக்களுக்கு குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் விடையளிக்காததைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே விடைத்தாள் மதிப்பீட்டின்போது பரீட்சகர்களால் கோடிட்டுக் காட்டப்பட்ட பிரதான அவதானிப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளது.

## பகுதி A

### வினா இல. 01

இந்தப் பகுதி பொருளியலின் ஒட்டுமொத்த பாடத்திட்டத்தின் ஒரு பெரும் பகுதியை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருந்தது. இப்பகுதி பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு, தரப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியான விடைகளைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களுக்கு, தரப்பட்ட 2 விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. வினாக்கள் **1.13** தொடக்கம் **1.15** வரையானவற்றில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. வினா இல. **1.15** தொடக்கம் **1.20** வரையானதற்கு விடைப்புத்தகத்தில் சரியான விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது.

**<u>வினாக்கள் 1.1 தொடக்கம் 1.10 வரை</u>**

**1.1** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருளியலின் அடிப்படை எண்ணக்கருவான அரிதான தன்மை பற்றி அமைக்கப்பட்டிருந்த இந்த வினாவுக்கு சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** உற்பத்தி வளங்கள் பற்றிய அறிவைப் பரீட்சிக்கும் பொருட்டு, மூலதனத்திற்கான வெகுமதி பற்றி வினவப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ‘‘வட்டி’’ எனச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.3** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பிரதியீட்டு நோக்கம் என்பது பணத்திற்கான கேள்விக்கான ஒரு காரணம் அல்ல என்பதை இனங்கண்டிருந்தனர்.

**1.4** கேள்வியின் விலை நெகிழ்ச்சி பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக இந்த வினா அமைக்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகளால் சரியான விடைகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் ‘‘பூரண நெகிழ்ச்சியற்றது’’ மற்றும் ‘‘நெகிழ்ச்சியற்றது’’ ஆகிய விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.5** சமபயன் வளையி பகுப்பாய்வு தொடர்பில் அமைக்கப்பட்ட இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**1.6** மத்திய வங்கி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்கான தலா வருமானம் தொடர்பில் பரீட்சிக்கப்பட்ட இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**1.7** பெரும்பாலான பரீட்சார்த்திகள் நேர் கிரயங்கள் பற்றி அமைக்கப்பட்டிருந்த இவ்வினாவுக்கு பொருள்களின் கிரயம் என்ற சரியான விடையினை அளித்திருந்தனர்.

**1.8** பல பரீட்சார்த்திகள் மனித அபிவிருத்தி பற்றிய போதிய அறிவைக் கொண்டிருக்காததை அவர்களின் திருப்தியற்ற விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது.

**1.9** நிதிசார் இடைத்தரகர்கள் பற்றிப் பரீட்சிக்கப்பட்ட இவ்வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகள் பரீட்சார்த்திகளிடம் அது பற்றிய அறிவு போதியளவில் இல்லை என்பதைக் காட்டுகிறது.

**1.10** உற்பத்திக் கிரயத்தைத் தொடர்புபடுத்தி அமைக்கப்பட்ட இந்த வினாவுக்கு பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகளை எழுத முடியவில்லை. திருப்திகரமான விடைகளை வழங்குவதற்கு கிரயப் பகுப்பாய்வின் ஒவ்வொரு எண்ணக்கரு பற்றியும் பரந்தளவான புரிதல் அவசியமானதாகும்.

**1.11** மற்றும் **1.12**

இந்த இரு வினாக்களுக்கும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை வழங்கியிருந்தனர். இங்கு தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள் மற்றும் பணத்தின் பெறுமதி ஆகியன பரீட்சிக்கப்பட்டிருந்தன.

**1.13** மற்றும் **1.15**

தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்ட இந்தப் பிரசினங்களுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்தியான விடைகளை அளித்திருந்தனர். குறுங்கால உற்பத்திச் செயன்முறை, குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி மற்றும் நிரம்பல் விதி ஆகியன பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

**1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகள் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டன.

**1.16** கேள்வி வளையியை வலப் புறமாக நகர்த்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு சரியான விடை அளித்திருந்தனர். ஆயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் கேள்வி வளையியை இடப்புறமாக நகர்த்தும் காரணிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.17** சிலருரிமைச் சந்தையின் பண்புகள் பரீட்சிக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ஏனைய சந்தை வகைகளின் பண்புகளையும் சேர்த்து குழப்பி எழுதியிருந்தனர்.

**1.18** கேள்வியில் மாற்றம் என்பதால் கருதப்படுவது யாது என்பதை சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதாவது கேள்வி வளையியின் இடப்புறமான அல்லது வலப்புறமான நகர்வு ஆகும். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கேள்விக் கணிய மாற்றத்தை அல்லது கேள்வி வளையியுடனான நகர்வு ஆகியவற்றை விபரித்திருந்தனர்.

**1.19** உற்பத்திச் செயன்முறை ஒன்றிலுள்ள நீண்டகால உற்பத்தி என்பதால் கருதப்படுவது யாதென விபரிக்குமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சகல உற்பத்திக் காரணிகளையும் மாறும் காரணிகளாக மாற்றுவதற்கு எடுக்கும் காலம் என்பதை ஏற்பிசைவு செய்திருந்தனர்.

**1.20** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேசிய வருமானச் சுற்றுப் பாய்வின் கசிவுகளுக்கான இரண்டு உதாரணங்களைச் சரியாகக் குறிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டனர்.

## பகுதி B

### வினா இல. 02

**(a)** பொருளாதாரமற்ற பொருள்களின் பண்புகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்ட இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்து முழுமையான புள்ளிகள் பெறப்பட்டிருந்தன.

**(b)** சில பரீட்சார்த்திகள் இந்த அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை மிகத் தெளிவாக இனங்கண்டு, பெயரிட்டிருந்ததுடன் அவை திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமையினால் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதையும் குறிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

- ஆயினும், சில பரீட்சார்த்திகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை மாத்திரம் பெயரிட்டிருந்ததுடன் அவை எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பது பற்றி விபரித்திருக்க வில்லை.
- சில பரீட்சார்த்திகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை எழுதி விபரித் திருந்தனர் ஆயினும் அவை எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை எழுதியிருக்க வில்லை. இதனால் முழுமையான புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

**(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் உழைப்பின் பண்புகளைச் சரியாகக் குறிப்பிட்டு, முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

### வினா இல. 03

**(a)** **(i)** கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் தரப்பட்டு, வரைபொன்றைப் பயன்படுத்தி சமநிலை விலை மற்றும் கணியத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும், பரீட்சார்த்திகள் வரைபின் மூலம் பிரசினத்தைத் தீர்ப்பதைத் தவிர்த்து, அதனை கணிதக் கோவையாகத் தீர்த்திருந்தனர். இதனால், அவர்களால் முழுமையான 4 புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பரீட்சார்த்திகள் வினாவில் தரப்படும் அறிவுறுத்தல் களுக்கு இணங்க விடையளிப்பதற்குப் பயிற்சி பெறுதல் வேண்டும்.

**(ii)** அதிகளவான பரீட்சார்த்திகள் உற்பத்தியாளர் மிகையைச் சரியாகக் கணிப்பிட்டு, முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும், அவர்கள் சமன்பாட்டை எழுதி, படிமுறையாக கணிப்பீட்டினை எழுதத் தவறியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் உற்பத்தியாளர் மிகைக்குப் பதிலாக நுகர்வோர் மிகையினைக் கணிப்பிட்டிருந்தனர்.

**(b)** அரசாங்கத்தால் பண்டமொன்றிற்கான அலகு வரியொன்றை விதிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அரசாங்கத்தால் பண்டமொன்றின் மீது வரியொன்று விதிக்கப்படும்போது, அதன் உற்பத்திக் கிரயம் அதிகரிப்பதால் வழங்கல் (நிரம்பல்) குறைவடைவதுடன் நிரம்பல் வளையி இடப்பக்கமாக நகர்கிறது. கேள்வி வளையி தொடர்ந்தும் மாறாது காணப்படுவதால் சமநிலைக் கணியம் குறைவடைவதுடன் பண்டத்தின் சமநிலை விலை உயர்வடைகிறது. அத்துடன், வரியானது நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களால் சுமக்கப்பட வேண்டும் என்பதுடன் அது ஒரு சமூக கிரயத்திற்கு உரித்துடையதாகிறது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இந்த வகையில் முழுமையாக விளக்கியிருந்தனர்.

## வினா இல. 04

**(a)** பரீட்சார்த்திகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையின் நடைமுறைத் தகவல்களுடன் இணைந்து சேகரிக்கப்பட்ட விடயங்களை முன்வைத்து புள்ளிகளைப் பெறுவதில் வெற்றிகண்டிருந்தனர்.

**(b)** பரீட்சார்த்திகள் தமது நடைமுறை அறிவைப் பயன்படுத்தி இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகளை வெற்றிகரமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(c)** இலங்கை மத்திய வங்கியின் அளவுசார் நாணயக் கொள்கைச் சாதனங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் அவற்றை குறிப்பிட்டிருந்தனராயினும் விளக்கியிருக்கவில்லை.

ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே வினாவில் கேட்கப்பட்டதைப் போன்று இரண்டு விடயங்களை எழுதியிருந்ததுடன், அவற்றை விபரித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## வினா இல. 05

**(a)** “வர்த்தக நிலுவை” என்னும் பதம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. ஏற்றுமதி அலகொன்றிலுள்ள இறக்குமதிகளது கொள்வனவுத் திறனை குழப்பி எழுதியிருந்தனர். ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் இடையிலான விகிதம் போன்ற தவறான விடைகள் வழங்கப்பட்டிருந்தன.

வர்த்தக நிலுவையானது ஏற்றுமதி விலைக்கும் இறக்குமதி விலைக்குமிடையிலான சதவீதமொன்றாகக் காட்டப்படுகிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் 100 இனால் பெருக்குவதை மறந்திருந்தனர்.

**(b)** ஒரு நாட்டை விட மற்றைய நாடொன்றினால் மிகவும் வினைத்திறனான முறையில் பொருளொன்றை உற்பத்தி செய்வதே முழு நயக் கோட்பாடு என பரீட்சார்த்திகள் சரியாகக் குறிப்பிட்டு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஆனால் சில பரீட்சார்த்திகள் குறைந்த சந்தர்ப்பச் செலவைக் கொண்ட நாடு முழு நயத்தைப் பெறுகிறது எனத் தவறான விடையைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்வதன் பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் கேட்கப்பட்டிருந்தன. இது தற்போதைய நிலைமையுடன் தொடர்புடைய நடைமுறை வினாவாகக் காணப்படுகிறது. ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் அடிப்படையில் இறக்குமதிகள் மீதான செலவினத்தைக் குறைத்து ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்தை அதிகரிப்பது என்றவாறான சரியான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன.

மேலும், இந்த விடயம் பற்றிய சிறந்த புரிதலைக் கொண்டிருந்த சில பரீட்சார்த்திகள் உள்நாட்டு தொழில்துறைகளை மேம்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

## பகுதி C

### வினா இல. 06

**(A)** **(a)** **(i)** அதிகளவான பரீட்சார்த்திகள் தனியார் நுகர்வுச் செலவினம், அரசாங்க நுகர்வுச் செலவினம் மற்றும் மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் போன்றவற்றைக் கூட்டி, சந்தை விலையில் மொத்த உள்நாட்டுச் செலவினத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**(ii)** அதிகளவான பரீட்சார்த்திகள் மொத்த உள்நாட்டுச் செலவினத்திற்கு ஏற்றுமதிகளைக் கூட்டி, இறக்குமதிகளைத் கழித்ததன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். அதாவது நிகர ஏற்றுமதிகளைச் சீராக்கம் செய்து. ஆயினும் ஏற்றுமதிகளை கூட்டுவதற்குப் பதிலாக தவறாகக் கழித்திருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**(iii)** வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சீராக்கம் செய்து மொத்த தேசிய வருமானக் கணிப்பீட்டை பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக மேற்கொண்டிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேசிய வருமானக் கணக்குகளின் வரையறைகளைச் சரியாகக் குறிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(B)** ஒரு நாட்டின் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(C)** பேரினப் பொருளாதார நோக்கங்கள் விபரிக்கப்பட வேண்டியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் முழுமையான புள்ளிகளைப் பெற முடியவில்லை. ஏனெனில், அவர்கள் நோக்கங்களைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் அவற்றை விபரித்திருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் கவனம் செலுத்த வேண்டும் என ''வினைச் சொல் செவ்வை நிரல்'' பற்றி வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவை நடைபெறவில்லை என்பதை விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -